# சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

(E-ISSN 2582-1113)

# International Research Journal of Tamil

Volume 3, Issue S-2, Year 2021


## தமிழ் இலக்கியத்தில் இறைநெறிக் கொள்கைகளும் கோட்பாடுகளும்

## Theological principles and doctrines in Tamil literature


**Published by**

**IOR PRESS**

**5/11, Perumal Kovil Stret,**

**Naickenpalayam, Coimbatore-641020**

**Tamil Nadu, India.**

**Ph: +919791748838**

**Email: support@iorpress.org**

**Website: https://irjt.iorpress.org/index.php/irjt**

**License:**

**All the work published in this journal is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**

# Index


Editorial i-ii

| A. No | Title | P.No |
|---|---|---|
| 1 | Worship of Lord Shiva and the development of Religious Principles<br>*Maria Dhanabal A* | 1-5 |
| 2 | Bharathi and Advaita<br>*Senthamzil Pavai S* | 6-11 |
| 3 | The Theological Principles of the Tribs through the Fiction Kurinjithen<br>*Karthigai Selvi P* | 12-17 |
| 4 | The Theological Principles of Mahakavi Bharati<br>*Charles L* | 18-23 |
| 5 | The Theological Teachings and Principles of Pavai Literature<br>*Chitra S* | 24-28 |
| 6 | Theology as expressed through musical instruments in the Divine Prabandham<br>*Janardhanan L* | 29-33 |
| 7 | Faith in God and Language Policy in Tamil Pattiyal Grammar<br>*Lakshmidevi G* | 34-39 |
| 8 | Advaita Doctrine and Unity<br>*Murugu Thayanithy* | 40-45 |
| 9 | The linguistic personality of the poet Vali through Krishna Vijayam<br>*Rajeshwari R* | 46-49 |
| 10 | Tiruppavai Unarttum Tiruvarutnerikal<br>*Gopi M* | 50-55 |
| 11 | Theology of the Karaikkal Ammaiyar<br>*Kalavathi P* | 56-60 |
| 12 | Atheism is the cult of the grave<br>*Dhanalakshmi M* | 61-65 |
| 13 | Murugan myth - Morality stands and lives long - Religion and religious norms<br>*Manivasagam K* | 66-71 |
| 14 | Mother Goddess Worship in Ancient Tamil Literature<br>*Mariswari V* | 72-76 |
| 15 | Satire techniques: Early devotional texts and mukkoodarpallu - An introductory comparison<br>*Stalin S* | 77-81 |
| 16 | Literary Pointing the Theology of Dinai | 82-87 |

| | | |
|---|---|---|
| | Jeyapriya J | |
| 17 | Naga Worship and Nagas in Villibharata<br>*Lalitha C* | 88-93 |
| 18 | Manikkavasagar's the Theological Policy of Shiva<br>*Regina Begum J, Senthamizh Pavai S* | 94-97 |
| 19 | The Raise of Tamilisai by Thevara Moover<br>*Divyaroobasharma P* | 98-101 |
| 20 | The Spiritual Expressions of Dhayumaanavar and Gunangudiyar in Paraparakkanni<br>*Sasireka P* | 102-106 |
| 21 | The Theological Priciples of Siddhar and Vallalar Songs<br>*Roopa M* | 107-111 |
| 22 | Theological Doctrines of Uḷankur Kelvi Ilampooranar<br>*Vignesh V* | 112-116 |
| 23 | Religious Theory in the Thinai Grammar<br>*Ganeshwari P* | 117-121 |
| 24 | The Three Tevaram theories and principles of God<br>*Kodeeswari R* | 122-125 |
| 25 | Tamil Theology and Ancestor Worship<br>*Ramarajapandian V* | 126-129 |
| 26 | Theories and Principles of Theology in the Sermon on the Mount Teaching of Jesus<br>*Arokiyathas T* | 130-134 |
| 27 | Theories of Theology in the Letters of Thirumangai Alvar<br>*Ilamaran S* | 135-139 |
| 28 | Alamarcelvan and Atalvallan<br>*Dhanalakshmi N, Senthamilppavai S* | 140-145 |
| 29 | Musical instruments that point to the Eighteen Lesser Books<br>*Praveena Madhavan* | 146-150 |
| 30 | Theological Dogmas in Karunambara Pathigam of Veermamunivar<br>*Stephen Mickel Ra M* | 151-157 |
| 31 | Archaeological Fundamentals in Eastern Vader Worship Rituals<br>*Vivanantaraca T* | 158-163 |
| 32 | Power worship of Bharatiyar songs<br>*Senthamizh Pavai S, Arivudainambi C* | 164-169 |
| 33 | Bhakti in the Hymns of Alwars<br>*Salin Siyama A* | 170-173 |

| | | |
|---|---|---|
| 34 | Religious Tolerance and Omnipotent God's Nature in Kamba Ramayana,<br>*Renugadevi A* | 174-179 |
| 35 | Vedic principles in Sangam literature<br>*Roobadevi A* | 180-184 |
| 36 | Bhakti norms in Vainava Anththies<br>*Sripriya R* | 185-189 |
| 37 | Vainava Philosophy in Alwar's Bhathi pasuram<br>*Karuppathevan U* | 190-200 |
| 38 | The Concept of God in Siddha Literature<br>*Ilamathy Janakiraman* | 201-206 |
| 39 | The Role and Contribution of Vyasar and Villi Baratha's in the Vainava Religious propaganda in Tamil Nadu<br>*Saranya P* | 207-212 |
| 40 | Devotional Theory in Comics<br>*Prabavathi S* | 213-217 |
| 41 | The Theory of the Major Theological Principles of Eight Anthologies<br>*Jeyabharathi T* | 218-221 |
| 42 | Theological principle and doctrine emphasized by Thiruvarutha<br>*Vijayakumar B* | 222-227 |
| 43 | Theological principles in the epic of Jesus<br>*Raja Sornam` T* | 228-233 |
| 44 | The theory of Theosophical Structure of Ilango Adigal<br>*Sudhakar K* | 234-238 |

**ர. சுரேஷ்**

முதன்மை ஆசிரியர்,

சர்வதேச தமிழ் ஆய்விதழ்

இந்தியப் பெருநிலப்பரப்பில் மதங்களின் செல்வாக்கும், அதற்கு வழங்கப்படுகின்ற அதீத முக்கியத்துவங்களும், தற்கால ஆய்வுச் சூழலில் எளிதில் புறக்கணித்துவிட இயலாத ஒன்று. குறிப்பாகத் தமிழகத்தைப் பொருத்த அளவிற்கு, இங்கு கோயில் கலாச்சாரம் வேறூன்றி இருப்பதைப் போல வேறு எங்கும் இல்லை எனலாம். கோயில் கலாச்சாரமும் அதையொட்டிய வழிபாட்டு மரபுகளும் ஒருபுறமிருக்கச் சிறுதெய்வ வழிபாடுகளும் அதனைச் சார்ந்த ஏராளமான நாட்டார்பண்பாட்டு புழங்குவெளிகளும் இன்றும் ஆற்றல் குறையாமல் உயிர்ப்போடு இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்தியப் பண்பாட்டில் பிறந்த எவரும் தன்னை நாத்திகர் என்று சொல்லிக் கொண்டாலும் கூட ஏதாவது ஒரு விதத்தில் புறவயமாகவேணும் மதங்களின் செல்வாக்கிற்கு ஆட்பட்டே ஆக வேண்டிய நிர்பந்தம் ஏற்படுவதை மறுக்கவியலாது. எனவே இங்கு மனிதனைப் பற்றிய, சமூகம் பற்றிய எந்த ஆய்வு முயற்சியிலும் மதம் பற்றிய ஆய்வு அதிக முக்கியத்துவம் உடையதாகவும், தவிர்க்க இயலாத ஒன்றாகவும் அமைந்துவிடுகின்றது.

இத்தகைய சூழலில் சமய மரபுகளை ஆராயவும், விளக்கவும், விமர்சனம் செய்யவும், நவீனமுறையில் பொருள் படுத்தவும் உகந்ததான ஆய்வுத்துறையாக இறையியல் (தியாலஜி) இன்று வளர்ந்து வந்துள்ளது. கிறிஸ்துவ பின்னணியில் இது உருவாகி இருந்தாலும், இன்று பரவலாக பிற சமய மரபுகளை ஆராயவும் பயன்படுகின்றது. நமது சமூகத்தில் மதங்களுக்கு வழங்கப்படுகின்ற அதீத முக்கியத்துவத்தின் பின்னணியில் மதங்கள் வலியுறுத்த விரும்பும் பொருள், வாழ்வைப் பொருள்படுத்த உதவும் அவற்றின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், நடத்தை முறைகள், சடங்குகள், குறியீடுகளின் அர்த்த பாவங்கள் போன்றவற்றை ஆராயவும் அவற்றில் எந்த அளவிற்கு தர்க்க மற்றும் அறிவியல் முறைகள் கையாளப்பட்டுள்ளன என்பதை அறியவும் இவ்வாய்வு துறை பெருமளவு உதவுகின்றது. இந்நிலையில் இறையியலை ஒரு ஆய்வு முறையாகக் கொண்டு நமது சமய மரபுகளையும், சமய பண்பாட்டின் மூல வளங்களையும் அடையாளம் கண்டு வெளிப்படுத்தினால் நமது மரபில் இறையில் குறித்த பார்வைகளை அதன் முழு அர்த்தத்தோடு அறிந்துகொள்ள முடியும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

மதங்கள் மனித வாழ்வின் எல்லாக் கூறுகளோடும் தொடர்புடையது என்பதால், நவீன கால மாற்றங்கள் அவற்றை ஆழமாகவும், சிக்கலான முறையிலும் எவ்வாறு பாதித்துள்ளன என்பது பற்றியும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். நவீன காலத்தில் ஏற்பட்டுள்ள சமூகமாற்றங்களும், சிந்தனைகளும், மனித வாழ்க்கைக்கு இதுவரைத் தரப்பட்ட அத்தனை அர்த்தங்களையும் தீவிரமாக சந்தேகிக்க வைப்பதுடன், மனிதனை எல்லாவற்றிலிருந்தும் அந்நியப்படுத்தி எதன்மீதுமான அவனது நம்பிக்கைகளை வலுவிழக்கச் செய்கின்றது. இந்நிலையில் சமயங்களுக்கும் இன்றைய நவீன மனிதனுக்குமான தொடர்பு அகவயமான அழுத்தத்தை அதிகம் பெறவில்லை என்பதையே நாம் உணரமுடிகின்றது. இது நமது பாரம்பரியத்தைப் பற்றியும் அதன் மதிப்புமிக்க மூலவளங்களை பற்றியும் அறியும் ஆர்வத்திலிருந்தும், அவை இன்றைய உலகிற்கு அளிப்பதற்கு ஏதேனும் இருக்கலாம் என்ற அளவிலேனும் சிந்திக்கும் முயற்சியிலிருந்தும் நம்மை சிறிது சிறிதாக விலக்கிக் கொண்டு

இருக்கின்றது. இச்சூழலில் நாம் நமது சமய மரபுகளை, கடவுள் குறித்த புரிதலை, நம்பிக்கைகளை, மதிப்போடும், மரியாதையோடும் கவனப்படுத்தி அவை எவ்வாறு யதார்த்த வாழ்வின் பரிணாமங்களோடு சம்பந்தப்பட்டுள்ளது என்பதையும், மனித சமூகத்தின் தேவைக்கும், இளைபாறுதலுக்கும் அவற்றின் பங்களிப்புகள் எத்தகையன என்பன குறித்தும், தற்காலத்திய பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக அவற்றிலிருந்து நாம் பெறக்கூடியன யாவை என்பன குறித்தும் ஆராய வேண்டி இருக்கின்றது.

நவீன அறிவியலோடு சமய சிந்தனைகளையும் தொடர்புபடுத்தி பார்த்தல், பிற சமயமரபுகளோடு ஒப்பிட்டாய்தல், சமயங்கள் வலியுறுத்துகின்ற அழகியல், அறவியல் பார்வைகளை புதிய கோணங்களில் விளக்கமுறச்செய்தல் முதலிய ஆய்வு முயற்சிகளின் ஊடாக புதிய கருதுகோள்களை உருவாக்கி முடிவுகளை ஆராய்ந்து எழுத நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டுள்ளோம். அத்தகைய முயற்சியின் பயனாக அமைந்த சிறியதொரு வெளியீடு தான் இந்த சிறப்பிதழ் என்பதில் மகிழ்வு கொள்கின்றோம்.

இந்நிலையில் போற்றுதலுக்குரிய மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழ்த்துறை இறையியல் என்ற ஆய்வுத்துறையைக் கவனப்படுத்தும் விதமாக இறையியல் நோக்கில் சமயங்களில் செல்நெறிகள் எனும் தலைப்பில் சிறப்பு வாய்ந்த ஒரு ஆய்வுக்கூடுகையை ஏற்பாடு செய்து, ஆய்வாளர்கள் தங்களின் மதிப்புமிக்க கட்டுரைகளையும் வெளியிட வாய்ப்பமைத்துத் தந்தமையை பாராட்டாமல் இருக்கவே இயலாது. இத்தகைய ஏற்பாட்டை சிறப்புற ஒருங்கிணைத்த தகைசால் பேராசிரியர், முனைவர் கருப்பத்தேவர் அவர்களை இத்தருணம் மிகுந்த நன்றி உணர்வோடு நினைவு கொள்கிறோம். உடனிருந்து பணியாற்றிய அனைவருக்கும் எமது ஆய்விதழின் சார்பாக பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.